பக்கங்கள்:-23

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 01 | வெள்ளிக்கிழமை | 14.06.2024 | அதிர்வு 318

## சிதைவடைந்த நிலையில் ஆண் சிசுவின் சடலம் மீட்பு

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொரலந்த பகுதியில் பிறந்து சில நாட்களேயான ஆண் சிசுவொன்றின் சடலம் நேற்று மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா பொலிஸ் 06

# சட்டப் புத்தகத்திலேயே இருக்கின்ற 13 இற்கு எதிராக ஏன் போர்க்கொடி?

### சஜித் கேள்வி; இன, மதங்களுக்கிடையில் நம்பிக்கை ஏற்பட வேண்டும் என்றும் வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

"எமது சட்டப் புத்தகத்திலேயே இருக்கின்ற அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துகின்றபோது ஏன் பிரச்சினைகள் வருகின்றன?" – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார்.

"எனவே, மக்கள் ஓரணியில் திரண்டு இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையில்நம்பிக்கையைக்கட்டியெழுப்பவேண்டியது மிக மிக அவசியம்" – என்றும் வலியுறுத்திய அவர், "கமராக்களுக்காக அல்லாமல் மனதளவில் அத்தகைய 06



### வாக்குகளைச் சுருட்டுவதற்காகத் திடீரென மாறும்

# 'கொள்கை புரட்டிகள்' குறித்து தமிழருக்கு நாமல் எச்சரிக்கை



**வாக்குகளைப் பெறுவதற்காகத் திடீரென தமது கொள்கைகளை மாற்றிக் கொள்ளும் அரசியல்வாதிகளை கவனத்தில் கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தமிழ் மக்களுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார்.** 06

# தந்தை செலுத்திய உழவு இயந்திரத்தில் சிக்கி 8 வயது மகள் பரிதாபகரமாகப் பலி

### மன்னாரில் நேற்று இரவு துயரம்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

தந்தை செலுத்திய உழவு இயந்திரத்தில் சிக்கி மகள் உயிரிழந்த பரிதாபச் சம்பவம் நேற்று இரவு 7 மணியளவில் மன்னார் – முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூவரசங்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

"மன்னார் முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூவரசங்குளம் பகுதியில் உள்ள விவசாயியான தந்தை ஒருவர் தனது வயலில் உழவு இயந்திரத்தின் 06



# தேர்தலைப் பிற்போட்டால் ஐ.தே.க. அழிந்துவிடுமாம்

### இப்படி எச்சரிக்கின்றார் மஹிந்த



"பிரதான தேர்தல்களைப் பிற்போடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முற்பட்டால் அதுவே அக்கட்சிக்கு இறுதிப் பயணமாக அமைந்துவிடும்."

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். 06




சு.க. பிளவுபட்டு நிற்கிறது. ஓரணி ரணிலை ஆதரிக்க முடிவு செய்துள்ளது. மைத்திரி அணியோ விஜேதாஸ ராஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தலில் களம் இறக்க முனைப்பாக உள்ளது.

ஆனால் சு.கவின் பெயரில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஒரே ஒரு எம்.பியான நம் அமுல் பேபி மாத்திரம் இவ்வாரம் முழுவதும் யாழ்ப்பாணத்தில் சஜித்தோடு ஒட்டிக்கொண்டு நிற்கின்றார்.

இதன் பின்னால் புதைந்து கிடக்கும் சூத்திரம் என்னவென்று தேடிப்பார்த்தேன். அப்போதுதான் விடயம் 06

# கிராம உத்தியோகத்தர்களின் புதிய சேவை யாப்புக்கு அரசாங்க சேவை ஆணைக்குழு அங்கீகாரம் தந்தது

## உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக்க பிரியந்த தெரிவிப்பு



“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பின்னர் கிராம உத்தியோகத்தர்களின் புதிய சேவை யாப்பு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அவசியம் ஏற்படுமாயின் இந்தப் புதிய யாப்பில் திருத்தங்களைச் செய்வதற்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.”

– இவ்வாறு உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக்க பிரியந்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் அசோக்க பிரியந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தற்போது, அரசாங்கம் “உறுமய” மற்றும் “அஸ்வெசும“ உள்ளிட்ட பல முக்கிய திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. அத்துடன் கடந்த காலத்தில் நிறுத்தப்பட்ட பல அபிவிருத்தித் திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் மூலம் கிராமம் மற்றும் நகரங்களில் மீண்டும் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கு ஆதரவளிப்பது அரச அதிகாரிகளின் பொறுப்பாகும். எனவே மக்களுக்கான கடமைகளை நிறைவேற்ற முடியுமான இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் நமது கடமையைச் செய்ய வேண்டும்.

இந்த அமைச்சை பொறுப்பேற்ற போது நாட்டில் பல பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன. ஆனால் நாம் தற்போது அரச சேவையை படிப்படியாக வலுப்படுத்தியுள்ளோம். அரச சேவைக்கு ஆள்சேர்ப்புச் செய்ய முடியாத நிலை காணப்பட்டது. தற்போது 1942 கிராம சேவைப் பிரிவுகளுக்கு கிராம உத்தியோகத்தர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். தற்போது அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேலும், நீண்ட காலமாக கிராம உத்தியோகத்தர்களின் சேவை யாப்பு பிரச்சினை காணப்பட்டது. அதற்காக முன்வைக்கப்பட்ட புதிய சேவை யாப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தலைமையிலான அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பின்னர் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தேவைப்பட்டால், அதில் திருத்தங்கள் செய்யவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கிராம உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க நடவடிக்கையின் போது, நாட்டில் அனர்த்த நிலை ஏற்பட்டது. ஆனால் நாட்டிலுள்ள பெரும்பான்மையான கிராம உத்தியோகத்தர்கள் உட்பட அரச அதிகாரிகள் அந்த நேரத்தில் முன் வந்து தமது கடமைகளை செய்தமைக்காக அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

மேலும், நாடு முழுவதும் கிராமிய உணவுப் பாதுகாப்புக் குழுக்கள் மற்றும் போசாக்குக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளமையால், மக்களுக்கு பாதுகாப்பான உணவை வழங்க முடிந்துள்ளது.” – என்றார்.

# இங்கிருந்து சிலர் சென்றால் அங்கிருந்து பலர் வருவார்கள்

## கட்சி தாவல் தொடர்பில் சஜித் இப்படிக் கருத்து




(எஸ்.நிதர்ஷன்)

“ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து சிலர் வேறு கட்சிகளுடன் சேர்ந்து இயங்கினாலும் அங்கிருந்து பலர் எம்முடன் வந்து இணைய இருக்கின்றார்கள்.”

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்னவின் நடவடிக்கைகள் தொடர்பான கேள்விக்குப் பதிலளிக்கும் போதே சஜித் மேற்கண்டவாறு கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ யாழ். ஊடக அமையத்தில் நேற்று ஊடக சந்திப்பை நடத்தியிருந்தார். இதன் போது, “உங்களுடன் இருந்த முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன வேறு கட்சியுடன் இணைந்து விட்டாரா?” – என்று சஜித்திடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர்,

“அப்படி எதுவும் எனக்குத் தெரியாது. என்னை விடவும் உங்களுக்குச் சிறந்த புலனாய்வாளர்கள் இருக்கின்றார்கள் அல்லவா? அவர்களிடம் இது தொடர்பில் வினவுங்கள்.

ஆனாலும், இங்கு நான் ஒரு விடயத்தைக் கூறி வைக்க விரும்புகின்றேன். அதாவது எம்முடன் இருந்து அங்கு செல்லும் சில பேருக்கு அப்பால் அங்கிருந்து பலர் எம்முடன் இணைய இருக்கின்றார்கள்.

அங்கு யார் யார் இணைந்தார்கள் என்பதைப் பார்த்தீர்கள் அல்லவா? எனவே, தெரியாத விடயங்கள் தொடர்பில் பொய்யான கருத்துக்களை கூறிப் பலனில்லை.” – என்றார்.




# அனைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உறுதி செய்து நாட்டில் துரித வளர்ச்சியை ஏற்படுத்தச் செயற்படுவேன்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதி

“அனைத்துப் பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தை உறுதி செய்வதுடன், முழு நாட்டையும் துரித அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்லும் இலக்குகளை அடைய அர்ப்பணிப்புடன் செயல்படுகின்றேன்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நேற்று ஆரம்பமான சார்க் நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்களின் 'SAARC FINANCE' மாநாட்டின் ஆரம்ப அமர்வில் பிரதான உரையை ஆற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“உலகளாவிய பொருளாதார சவால்களுக்கு மத்தியில் மத்திய வங்கிகளின் செயற்பாடுகள்“ எனும் தொனிப் பொருளில் 45 ஆவது முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாடு இரண்டு நாள்கள் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில்,

“இன்று காலை நற்செய்தியொன்று கிடைத்தது. சர்வதேச நாணய நிதியத்துடனான திட்டத்தின் கீழ் எங்களின் செயல்திறன் வலுவானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. உண்மையில், நான் எதிர்பார்த்ததை விட இது சிறப்பாக நிலைமையாகும். டிசம்பர் 2023 இன் இறுதியில் இருந்து சமூக செலவினங்களுக்கான இலக்கைத் தவிர அனைத்து அளவு இலக்குகளும் எட்டப்பட்டுள்ளன என்றும், பல கட்டமைப்பு இலக்குகள் ஏப்ரல் 2024 இறுதிக்குள் தாமதமாகவேனும் செயல்படுத்தப்பட்டுள்ளன என்றும் சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

இந்த நெருக்கடியில் இருந்து இலங்கை இவ்வளவு துரிதமாக மீளும் என்று பலரும் நினைக்காத நேரத்தில், கடந்த இரண்டு வருடங்களில் அதற்கான சிறப்பான பணியை செய்துள்ளோம். இது தொடர்பில் நான் மிகவும் நம்பிக்கையுடன் செயற்பட்டேன். இந்த நம்பிக்கையை என்னுடன் பகிர்ந்து கொள்ளக் கூடிய குழுவொன்றிருப்பது எனக்குக் கிடைத்த அதிர்ஷ்டமாகும். குறிப்பாக மிகவும் கடினமான சூழ்நிலையில் இந்தக் குழுவை வழிநடத்துவதில் இலங்கை மத்திய வங்கி ஆற்றிய பங்கை நான் பாராட்ட வேண்டும். அவர்கள் இலங்கைக்கு பழக்கமில்லாத செலவைக் கட்டுப்படுத்தும் கொள்கைகளை முன்னெடுத்தார்கள்.

வரவு – செலவுத் திட்டக் கட்டுப்பாடுகளுக்குள் கொள்கைகளை வகுப்பதற்காக மத்திய வங்கியுடன் இணைந்து பணியாற்றிய நிதி அமைச்சின் செயலாளருக்கும் நிதி அமைச்சின் ஊழியர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்திய அரசு, அதன் ரிசர்வ் வங்கி, பங்களாதேஷ் அரசு, அதன் மத்திய வங்கிக்கு ஆகியவற்றுக்கும் எனது நன்றிகள். அவர்கள் கொடுத்த மூன்றரை பில்லியன் டொலர் தொகையும் 200 மில்லியன் டொலர் தொகையும் இலங்கைக்கு உயிர் காக்கும் தொகையாக அமைந்தது. இல்லாவிட்டால் இன்று இந்த ஸ்திரத்தன்மையை அடைந்திருக்க முடியாது.

அவர்களின் ஆதரவுடன் உரத்தை கொள்வனவு செய்ய முடிந்தது. அதற்கு, யுஎஸ்எயிட் மற்றும் உலக வங்கியின் ஆதரவும் கிடைத்தது. இது ஒரு கடினமான ஆண்டாக மாறியது. அதனை ஒரு புத்தகமாக எழுதலாம்.

பல உலகளாவிய பொருளாதார சவால்களுக்கு மத்தியில் வங்கியின் பிரச்சினைகளை ஆராய்வதற்காக இன்று நாம் இங்கு கூடியுள்ளோம். இந்த விடயம் தொடர்பில் எமது வலயத்தில் ஆழமாக ஆராய வேண்டும். 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததில் இருந்து நிதிக் கொள்கை ஆற்றிய பங்கு மற்றும் கொவிட் தொற்றுநோயிலிருந்து மீள எடுக்கப்பட்டிருக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி நான் விவரிக்க வேண்டியதில்லை.

04














# அனைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உறுதி செய்து நாட்டில் துரித வளர்ச்சியை ஏற்படுத்தச் செயற்படுவேன்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதி

(3ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை என்ன சாதித்துள்ளது, எதிர்வரும் ஆண்டுகளில் நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். நெருக்கடியின் ஆழத்தை விளக்குவதற்கு, நான் சில விடயங்களைச் சொல்கிறேன். நான் 1949 ஆம் ஆண்டு பிறந்தேன். அப்போது நிலையான மாற்று விகிதம் 3 ரூபாய் 32 சதங்கள். 1978 இல், நான் அமைச்சரவையில் இருந்தபோது, நிலையான மாற்று விகிதத்தை நீக்கிவிட்டு, டொலருக்கு நிகரான 16 ரூபாய் என்ற மிதக்கும் மாற்று விகிதத்திற்கு மாற்றினோம்.

இப்போது நாம் புதிய பொருளாதாரத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். நாம் அதற்காக வெட்கப்பட வேண்டிய அவசியமில்லை. அதை நாம் செய்து முடிக்க வேண்டும். ஜேர்மனியில் எர்ஹார்ட் அதையே செய்தார். போருக்குப் பிறகு ஜப்பானியர்களும் அதனை செய்துள்ளனர். சீனாவும் செய்தது. வியட்நாமும் அதையே செய்தது. அதனால் நாம் அச்சப்பட வேண்டியதில்லை.

ஆனால் நாட்டின் ஜனநாயக சோசலிச அமைப்பின் கொள்கைகளிலிருந்து நான் ஒருபோதும் விலகவில்லை. மக்களுக்கு போதியளவான வாழ்வாதாரத்தை உருவாக்குதல், பொது நலன் மற்றும் தனியார் பொருளாதார நடவடிக்கைகள் மூலம் முழு நாட்டினதும் விரைவான வளர்ச்சியை ஊக்குவித்தல் உள்ளிட்ட நோக்கங்களை அடிப்படையாக கொண்டே செயற்படுகிறோம்.

இந்த இரண்டு முயற்சிகளையும் முன்னெடுத்தால் இலங்கையின் பொருளாதாரக் கொள்கையை மாற்றி அமைக்க முடியும். அரசமைப்பிற்கு அமைய செயற்படுவதாக சட்டபூர்வமாக உறுதி அளித்திருப்பதால், அதற்கு முரணாக செயற்பாடுவதாக எவரும் சொல்ல முடியாது.

நமது மக்கள் தொகையின் கீழ் மட்ட மக்கள் பயன் பெறுவதை உறுதிசெய்ய நாம் இந்தப் பணிகளை மேற்கொண்டுள்ளோம். சமூகத்தின் உயர்மட்டத்தில் உள்ள ஒரு சிலருக்கு இதைக் கட்டுப்படுத்த முடியாது. நாம் பாரிய நிறுவனங்களை மேலும் விரிவுபடுத்த வேண்டியுள்ளது. அவற்றில் அதிகமானவை மேலும் விரிவுபடுத்தப்படுவதை பார்க்க நான் விரும்புகிறேன்..” – என்றார்.





# சவால்களை வெற்றிகொள்ளும் அறிவுத்திறனுள்ள இளம் தலைமுறையினரை உருவாக்க வேண்டும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

“எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் வகையில் அறிவும் பயிற்சியும் நிறைந்த இளைஞர் தலைமுறை உருவாக்கப்பட வேண்டும். நாட்டின் இளைஞர்களுக்கு உயர் வருமான வழியை உருவாக்கத் தேவையான பொருளாதார செயற்திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இளைஞர் படையணியின் இளைஞர், யுவதிகளை ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் சந்தித்தபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இளைஞர் படையணி ஆரம்பிக்கப்பட்டு 22 வருடங்களாகின்றன. அன்றிருந்த பொருளாதார, சமூக முறைமைக்கு ஏற்ற வகையில் இந்த இளைஞர் படையணி ஆரம்பிக்கப்பட்டது. காலத்துக்கு ஏற்ப இளைஞர் படையணியும் மாற வேண்டும். இளைஞர்களுக்கு நல்ல எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுக்க, நல்ல வருமான நிலையை உருவாக்க வேண்டும். அதற்கு இளைஞர் படையை மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இளைஞர்கள் அதிக வருமானம் உள்ள தொழில்களை விரும்புகிறார்கள். எனவே, அந்த நிலையை உருவாக்குவதற்கான திட்டங்களை உருவாக்க வேண்டும். அதற்காக நாடாளுமன்றத்தில் பொருளாதார பரிமாற்ற சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் ஊடாக 2027 ஆம் ஆண்டிற்குள் வேலையின்மையைக் குறைக்க முடியும். 2035 ஆம் ஆண்டிற்குள் அதிக வருமானம் தரும் பல தொழில் துறைகளை உருவாக்கலாம்.

2048 ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த நாடொன்று உருவாகும். இன்று இங்கு இருக்கும் இளைஞர் படையணி மாணவர்களுக்கு அப்பொழுது 50 வயது கூட ஆகியிருக்



காது. புதிய பொருளாதாரத்தை உருவாக்கத் தேவையான திட்டத்தை செயல்படுத்த வேண்டும். வியட்நாம், தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தியில் நாம் கவனம் செலுத்த வேண்டும். எனவே, ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், விரைவாக அபிவிருத்தி செய்யக்கூடிய துறைகள் தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும். சுற்றுலாத் துறை, விவசாயத் துறை, தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளை மேம்படுத்துவதற்கான அவசரத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். இதற்காக இளைஞர் படையணி மாணவர்களை வழிநடத்த வேண்டிய தேவை உள்ளது. பசுமை சமுதாயம் மற்றும் பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்குவதன் மூலம், எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் அறிவும் பயிற்சியும் கொண்ட இளம் தலைமுறையை உருவாக்க தேவையான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். தொழில் பயிற்சி பெற்ற இளைஞர்களை உருவாக்கி நாட்டின் பொருளாதாரத்தை புதிய பரிமாணத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும்.” – என்றார்.











## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

வெளுத்தது.

ரணிலின் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் சு.கவின் சிரேஷ்டர்கள் சிலரைத் தம் சார்பில் ரணிலிடம் தூது விட்டிருக்கின்றார் நம் அமுல் பேபி.

வேறென்ன, மாவட்ட இணைப்புக் குழுத் தலைவர் பதவி வேண்டித்தான். ஆனால் தமக்கு முழு ஆதரவு தந்து தம்முடன் நிற்கும் டக்ளஸைக் கைவிட விரும்பாத ரணிலாரோ, தமது வழமையான பாணியில் – நரித் தந்திர அணுகுமுறையில் – 'ஆகட்டும் பார்க்கலாம்' என்று கூறி, காலத்தை இழுத்தடித்து வந்திருக்கின்றார்.

பார்த்துப் பார்த்து களைத்துப் போன அமுல் பேபி மெல்ல சஜித் பக்கம் தலையை நீட்டி விட்டார். அவர் ஜனாதிபதியானால் மீண்டும் மாவட்ட இணைப்புக் குழுத் தலைவர் பதவி கிடைக்கும், யாழ் செயலகத்துக்குள் பெரிய அலுவலகம் திறக்கலாம், அதைப் பயன்படுத்தி மீண்டும் வெல்வதற்கு கயிறு விடலாம் என்று அவர் திட்டமிட்டு இருப்பார் என நினைக்கிறேன்.

சஜித்தையும் சிலர் அமுல் பேபி என்கிறார்கள். சில சமயம் அமுல் பேபிகளுக்குள் பொருந்தி வருமோ என்னவோ....!

\+ + +

மேற்கு நாடுகள், ஆஸ்திரேலியா, இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், ஐ.நா. என்று பல தரப்புகளின் தூதுவர்களையும் ராஜதந்திரிகளையும் கொழும்பில் அடிக்கடி சந்திக்கும் தமிழ் பிரமுகர் சுமந்திரன் எம்.பி.

அனேகமாக அவை பற்றிய தகவல்களையோ செய்திகளையோ அவர் கசிய விடுபவர் அல்லர். தான் சந்தித்துப் பேசும் தரப்புக்கள் அது பற்றிய இரகசியம் பேண விரும்புவதால் அவர் அப்படி நடந்து கொள்கின்றார் என்று நான் நினைப்பதுண்டு.

வழமைக்கு மாறாக நேற்று முன்தினம் மாலையில் அவர் இந்தியத் தூதுவரைச் சந்தித்த தகவல் அன்று இரவே ஊடகங்களில் கசிந்திருந்தது. எப்படி என்று தேடிப் பார்த்தேன்.

இந்தியத் தரப்புத்தான் படங்களோடு அதைக் கசிய விட்டிருந்தது. சந்திப்பின்போது கைத்தொலைபேசி மூலம் படங்கள் எடுக்கப்பட்டமையை சுமந்திரன் அவதானிக்கத் தவறிவிட்டார் என்பதை அவருடன் பின்னர் உரையாடியது போது அறிந்து கொண்டேன்.

இப்படி சுமந்திரனுடனான இந்திய தூதரின் சந்திப்பு பற்றிய தகவலை இந்தியத் தரப்பு தானே வெளியே கசிய விட்டதில் ஏதேனும் சூத்திரம் பொதிந்திருக்கும் என்று எனக்கும் சந்தேகம்.

பேச்சின் விவரங்களை விலாவாரியாக வெளியிட சுமந்திரன் மறுத்து விட்டார். தூதுவர் மூலமும் அதை அறிய முடியாது.

விடயங்களை ஊகித்து முடிவு செய்யவும் இயலவில்லை.

நிச்சயமாக ஏதேனும் காரணம் இருக்கும். மலிந்தால் சந்தைக்கு வரும்தானே. அப்போது பார்த்துக் கொள்ளலாம்.

## தந்தை செலுத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊடாக உழுது கொண்டிருந்தார்.

இதன்போது உழவு இயந்திரத்தின் மக்காட் பகுதியில் அமர்ந்து கொண்டிருந்த அவரது 8 வயதுடைய மகள் திடீரென கீழே வீழ்ந்த நிலையில் உழவு இயந்திரத்தில் அகப்பட்டு உயிரிழந்தார்.

சிறுமியின் சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## சிதைவடைந்த நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலையத்துக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டனர். சிசு யாருடையது என இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

சிசுவின் சடலம் சிதைவடைந்த நிலையில் காணப்படுகின்றது என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

நுவரெலியா பதில் நீதிவான் ஜயமினி அம்பகஹவத்த விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் சிசுவின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது .

சடலமாக மீட்கப்பட்ட சிசுவின் தாயைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் உதவியுடனும் அப்பகுதியில் உள்ள பிரதேச தாதியர்களின் உதவியுடனும் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சட்டப் புத்தகத்திலே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்" – என்றும் சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவருமான சஜித், யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போது 13 ஆவது திருத்தம் தொடர்பான கேள்விக்குப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் என்பது எமது சட்டப் புத்தகத்தில் இன்று அல்லது நேற்று வந்த ஒன்றல்ல. இந்த 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றபோது ஏன் பிரச்சினைகள் வருகின்றன.?

நாட்டிலுள் இனங்களும் மதங்களும் ஏனைய இனங்களையும் மதங்களையும் மதிப்பதில்லை. அதுவே இதற்கான பிரதான காரணமாக உள்ளது.

ஆகவே, சற்று சிந்தித்துப் பாருங்கள். சிங்கள மொழி பேசும் எமது சிங்கள மக்கள், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் தொடர்பில் நம்பிக்கையின்றிச் செயற்படுகின்றனர்.

அதேபோன்றே தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் தொடர்பில் நம்பிக்கையின்றி செயற்படுகின்றனர்.

அவ்வாறே முஸ்லிம் மக்களும் சிங்கள மற்றும் தமிழ் மக்கள் தொடர்பில் நம்பிக்கையின்றிச் செயற்படுகின்றனர்.

இவ்வாறு ஒவ்வொருவரும் நம்பிக்கையற்ற நிலையிலேயே இருக்கின்றனர். இதுவே இங்குள்ள பாரிய பிரச்சினையாகும்.

எனவே, அனைவரும் ஒன்றிணைய வேண்டும். இதனூடாகவே நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். அதுவே மிக முக்கியமான விடயமாக உள்ளது.

கமராக்களுக்காக அதனை ஏற்படுத்தாமல் மனதளவில் அவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்." – என்றார்.

## 'கொள்கை புரட்டி...

"13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஆரம்பம் முதலே ஆதரவளித்து வரும் கட்சிகளையும் அதனை எதிர்த்த கட்சிகளையும் தமிழ் மக்கள் நம்பலாம். ஆனால், தேர்தலுக்குச் சற்று முன்னர் தமது கொள்கைகளை மாற்றிக் கொள்பவர்கள் "கலரி"க்கு (மக்கள் கூட்டத்துக்கு) விளையாடுகின்றார்கள்." – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு ஆதரவளித்த அதே அரசியல் கட்சிகள் தற்போது மாறிவிட்டன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவும் இக்கட்சிகளின் இரட்டை வேடத்துக்குச் சான்றாகும் என்றும் நாமல் எம்.பி. மேலும் கூறியுள்ளார்.

## தேர்தலைப் பிற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"அரசமைப்பின் பிரகாரம் முதலில் ஜனாதிபதித் தேர்தலும், அதன்பின்னர் நாடாளுமன்றத் தேர்தலும் நடத்தப்பட வேண்டும். இரு தேர்தல்களையும் பிற்போட முடியாது. அவ்வாறானதொரு முட்டாள்தனமான முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சி இறங்காது என்றே நம்புகின்றேன். அவ்வாறு இறங்கினால் அதுவே அக்கட்சியின் இறுதிப் பயணமாக அமையும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் விரைவில் அறிவிக்கப்படுவார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி மீதே மக்களுக்கு நம்பிக்கை உள்ளது." – என்றார்.







# அரசாங்கத்தின் நலன்புரி வேலைத்திட்டங்களின் பயன் விரைவில் மக்களை சென்றடைய நடவடிக்கை வேண்டும்

## மாகாண ஆளுநர்களிடம் ஜனாதிபதி வேண்டுகோள்

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் நலன்புரித் திட்டங்களை வினைத்திறனுள்ளதாக்கி அதன் பயன்களை மக்களுக்கு துரிதமாக வழங்குவதற்கு ஆளுநர்கள் பங்களிக்க வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாகாண ஆளுநர்களுடன் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாகாண மட்டத்தில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறையை விரைவாகத் தீர்க்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் உறுமய காணி உறுதி வழங்கும் திட்டத்தின் வினைத்திறன் என்பன குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

உறுமய காணி உறுதிகளை வழங்கும் வேலைத்திட்டத்தை வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதற்கு கிராம உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக மற்றுமொரு குழுவிற்கு அதிகாரத்தை வழங்கி நடமாடும் சேவைகளை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியத்தை ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் மக்களை ஆர்வமூட்டி, அவர்களுக்கு அந்த நன்மையை வழங்க வேண்டிய பொறுப்பு பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நினைவுகூர்ந்தார்.

இதேவேளை, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்காக ஜனாதிபதி நிதியத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டத்தை துரிதப்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

முதலாம் தரம் முதல் 11ஆம் தரம் வரை கல்வி கற்கும் ஒரு லட்சம் மாணவர்களுக்கான ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் மேல் மாகாணத்திற்கு 16,152 புலமைப்பரிசில்களும், வடமாகாணத்திற்கு 8,636 புலமைப்பரிசில்களும், ஏனைய மாகாணங்களுக்கு 10,000 புலமைப்பரிசில்களும் வழங்கப்படவுள்ளன எனவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.



மேலும்,க.பொ.த உயர்தரம் கற்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு மாதம் 6,000 ரூபா வீதம் 24 மாதங்கள் புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தின் பணிகள் தற்போது நிறைவுபெற்றுள்ளதாகவும், கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த 2000 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் ஜூன் 19 ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் அலரி மாளிகையில் நடைபெறவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதமர் தினேஷ் குணவர்தன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## நாமலின் உபதேசம்

குற்றத்தைச் சுமத்தி சுட்டு விரலை நீட்டும் போது, அதே கையின் மற்றைய மூன்று விரல்களும் தன் பக்கம் நோக்கிச் சுட்டுவதை குற்றம் சுமத்துபவர்கள் மறந்து விடுகிறார்கள்.

'கொள்கை புரட்டிகள்' குறித்து தமிழ் மக்களுக்கு எச்சரிக்கை தெரிவித்து மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ கருத்து வெளியிட்டிருக்கின்றமையை நோக்கும்போது குற்றச்சாட்டு விரல் பற்றிய எண்ணமே வருகின்றது.

அவரது குற்றச்சாட்டு விரல் ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தியை நோக்கியதாக இருக்கும் அதே சமயம், அதேபோன்ற குற்றச்சாட்டுகள் அவரின் தரப்பு மீது இருக்கின்றமையையும் அவர் மறந்து விடக் கூடாது.

13ஆவது அரசமைப்பு திருத்தமும் அதற்கு, வழி செய்த இலங்கை - இந்திய ஒப்பந்தமும் கொண்டுவரப்பட்ட போது அவற்றை கடுமையாக எதிர்த்தவர்கள் ஜே.வி.பியினர். அவற்றை அடிப்படையாக முன்னிறுத்தித்தான் எண்பதுகளின் கடைசியில் அவர்களது ஆயுதம் தாங்கிய இரண்டாவது கிளர்ச்சியே முன்னெடுக்கப்பட்டது.

இப்போது அதே 13 ஆவது திருத்தத்தின் முழு நடைமுறையாக்கம் குறித்து அவர்கள் பேசுகின்றார்கள். அதுவும் தமிழர்களின் மூளை மையமான யாழ்ப்பாணத்தில் வந்து நின்று அதனை வலியுறுத்துகின்றார்கள்.

இதனைத்தான் வாக்குகளைச் சுருட்டுவதற்கான 'கொள்கை புரட்டிகள்' என்று சுட்டி நமக்கு எச்சரிக்கை தருகின்றார் நாமல்.

13 ஆவது திருத்தத்தை இலங்கை அரசமைப்புச் சட்டத்தில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்ட காலத்தில் இருந்தே அதனைக் கடுமையாக - தீவிரமாக - எதிர்த்து வந்தவர்கள் ஜே.வி.பியினர். அண்மைக்காலம் வரை அந்த எதிர்ப்பு நீடிக்கவே செய்தது.

அவர்களைப் போல 13 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்ட போது சு.கவிலிருந்த ராஜபக்ஷக்களும் கடுமையாக எதிர்த்தவர்கள்தான்.

ஜே.வி.பியினர் பின்னர் தெற்கில் மாகாண சபைத் தேர்தல்களில் பங்கு பற்றினார்களாயினும் வடக்குக் கிழக்குக்கு மாகாண சபைகள் மூலம் அதிகாரத்தை பகிரும் ஏற்பாட்டுக்கு அண்மை காலம் வரை அவர்கள் கடும் எதிர்ப்புக் காட்டியே வந்தனர். வடக்கும் கிழக்கும் ஒன்றுபட்ட தமிழர் தாயகமாக இணைந்திருப்பதற்கு எதிராக உயர் நீதி மன்றத்திற்குப் போய் வாதாடி அதனை பிரித்தவர்களும் அவர்கள் தான்.

இப்போது ஜனாதிபதி தேர்தல் வெற்றிக்காக தமிழ் மக்களின் வாக்குகளைச் சுருட்டுவதற்கு கொள்கைகளைப் புரட்டிப் போட்டுக் கொண்டு அவர்கள் உருத்திராட்சப் பூனைகளாக வடக்குக் கிழக்குக்குப் படை எடுக்கிறார்கள் என்பது தமிழர்களுக்கு நன்கு தெரியும்.

ஆயினும், தமிழர்கள் அமைதி பேணி அதை சகித்துக் கொள்கிறார்கள். தந்திரம் காக்கின்றார்கள். ஜே.வி.பியினர் தாம் புரட்டிப்போட்டுள்ள தமது கொள்கைகளை தங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் - கறுப்பு வெள்ளையில் - பதிவில் - கொண்டுவரும் வரை பேசாமல் இருப்பதுதான் தமிழர் தரப்புக்கு உசிதமானது.

முதலில் எழுத்தில் வரட்டும். பின்னர் முடிவு செய்யலாம் என்பதுதான் தமிழர் பக்கத்து நிலைப்பாடு. அதற்காக அவர்கள் அமைதி காத்து, பொறுமை பேணுவர். ஆயினும் அந்த அமைதியின் அர்த்தம் அப்படியே ஜே.வி.பியினர் தமிழர் காதில் பூச்சூற்றுவதற்கு இடமளித்து அவர்கள் ஏமாந்து போயினர் என்பது அல்ல.

அதே நேரம் ஜே.வி.பியினரை 'கொள்கை புரட்டிகள்' என்று தமிழர் தரப்புக்கு உபதேசிக்கும் உத்தமமான நிலையில் மொட்டுத்தரப்பினர் இல்லை என்பதையும் தமிழர்கள் சுட்டிக்காட்டித்தானாக வேண்டும்.

இன்று தத்துவம் பேசும் நாமல் ராஜபக்ஷவுக்கு அவரின் தந்தையார் 2005இல் அதிகாரத்துக்கு வந்த போது என்ன கூறினார், எப்படி நடந்து கொண்டார் என்பது தெரியாமல் இருக்கக் கூடும். அப்போது இராணுவச் சமவலு நிலையில் புலிகளின் பலம் தீவிரமாக இருந்தது. மஹிந்த ராஜபக்ஷ பதிமூன்றுக்கு மேல் போய் ஏதாவது கொடுத்துப் புலிகளைச் சமாளிக்க தயாராக இருந்தார். அதற்காகப் புலிகளுக்குத் தூது விட்டார். பின்னர் நான்கு ஆண்டுகள் கழித்து யுத்த முறைமைகளுக்கு முரணாகப் போர் நடத்தி புலிகளை வீழ்த்தியதும், கொள்கையை புரட்டிக் கொண்டு விட்டார்.

அந்தப் பின்புலத்தில் ஜே.வி.பியினரை நாமல்சாடுவது 'சட்டியைப்பார்த்து பானை கறுப்பு எண்டதாம்' என்ற கதையை ஒத்ததுதான்.

# இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகராக அஜித் தோவல் மீண்டும் நியமிக்கப்பட்டார்



இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகராக அஜித் தோவல் மீண்டும் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அதேபோல், பிரதமரின் முதன்மைச் செயலாளராக பி.கே.மிஸ்ரா மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். ஜுன் 10 முதலே இந்த நியமனங்கள் அமலுக்கு வந்தன என அரசு தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், மீண்டும் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக அஜித் தோவலும், பிரதமரின் முதன்மைச் செயலராக பி.கே. மிஸ்ராவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் பிரதமரின் பதவிக் காலம் வரை அல்லது மறு உத்தரவு வரும்வரை அப்பதவியில் நீடிப்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அஜித் தோவல், பி.கே. மிஸ்ராவுக்கு அமைச்சரவை அமைச்சு வழங்கப்படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களின் மறுநியமனமானது இவ்விரு அதிகாரிகள் மீதும் பிரதமர் மோடி தனிப்பட்ட முறையில் கொண்ட நம்பிக்கையை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது .

அதேபோல் அமித் காரே, தருண் கபூர் ஆகியோர் பிரதமரின் ஆலோசகர்களாக மறு நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என அமைச்சரவை நியமனங்களுக்கான குழு உறுதிப்படுத்தியுள்ளது.

ஜுன் 10 தொடங்கி இவர்களது பதவிக் காலம் 2 ஆண்டுகள் வரை இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் மத்திய அரசு செயலாளர்கள் பதவி அந்தஸ்தில் நியமிக்கப்பட்டுள்ளனர்.



# அருணாச்சல முதல்வராக பெமா காண்டு பதவியேற்றார்

அருணாச்சல பிரதேசத்தில் முதல்வராக நேற்று பெமா காண்டு பதவியேற்றார். தொடர்ந்து மூன்றாவது முறையாக அவர் முதல்வராகி உள்ளார்.

அவருக்கு ஆளுநர் கே.டி.பர்நாயக் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். அவருடன் 11 அமைச்சர்கள் பதவியேற்றுக் கொண்டனர். பதவியேற்பு விழாவில் மத்திய அமைச்சர்கள் அமித் ஷா, நட்டா மற்றும் பாஜக கட்சியினர் பங்கேற்றனர்.

மொத்தம் உள்ள 60 தொகுதிகளில் பா.ஜ.க. 46 தொகுதிகளை கைப்பற்றி அபார வெற்றி பெற்று தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சி அமைத்துள்ளது. இதில் 10 தொகுதிகளில் பா.ஜ.க. போட்டியின்றி வெற்றி பெற்றது. போட்டியின்றி வெற்றி பெற்ற வேட்பாளர்களில் முதல்வர் பெமா காண்டுவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. பா.ஜ.க. அமைச்சரவையில் பெண் ஒருவருக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த தேர்தல் முடிவுகள் கடந்த 2 ஆம் திகதி வெளியாகி இருந்தது. இதில் தேசிய மக்கள் கட்சி (என்.பி.இ.பி) 5, தேசியவாத காங்கிரஸ் (என்.சி.பி) 3, அருணாச்சல் மக்கள் கட்சி (பி.பி.ஏ) 2, காங்கிரஸ் 1 இடங்களில் வெற்றி பெற்றன. 3 தொகுதிகளில் சுயேச்சை வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நடிகர் பிரதீப் கே.விஜயன் சடலமாக மீட்கப்பட்டார்

தென்னிந்திய தமிழ்த் திரைப்பட நடிகர் பிரதீப் கே.விஜயன் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டின் குளியலறையிலிருந்து அவரது சடலம் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது அவரது தலையில் காயங்கள் காணப்பட்டன என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவர் தெகிடி, மேயாத மான், லிப்ட் உள்ளிட்ட பல திரைப்படங்களில் நடித்துள்ளார்.

பிரதீப் கே.விஜயனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக ராயப்பேட்டை வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அத்துடன், இவரது மரணத்திற்கான காரணம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





# காசா மீதான இஸ்ரேல் தாக்குதல் இதுவரை 15,694 சிறுவர்கள் பலி

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் 250 நாள்களைக் கடந்துள்ள நிலையில், சுமார் 15 ஆயிரத்து 694 சிறுவர்கள் இதுவரையில் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 17 ஆயிரம் சிறுவர்கள் பெற்றோரை இழந்துள்ளனர் எம வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

போரினால்பாதிக்கப்பட்டபகுதிகளில்5வயதிற்குட்பட்ட8ஆயிரம் சிறுவர்கள் ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.




# இந்தோனேசியாவில் பாரிய நிலநடுக்கம்: சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை

இந்தோனேசியாவின் வடக்கு சுலவேசி மாகாணத்தில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அந்த நாட்டு பேரிடர் மையம் தகவல் வெளியிட்டுள்ளது

அந்தநாட்டுநேரப்படிநேற்றுஅதி.காலை12:01மணியளவில் இந்நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.9 ஆக பதிவாகியுள்ளதாக வானிலை, காலநிலை மற்றும் புவி இயற்பியல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

தலாட் தீவுகளின் வடமேற்கே 41 கிலோமீற்றர் தொலைவில் கடலுக்கு அடியில் 32 கிலோமீற்றல் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

எனினும் நிலநடுக்கம் பெரிய அலைகளை உருவாக்கவில்லை என்பதால் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




# ஜி 7 மாநாட்டில் பங்கேற்பதற்காக சென்ற தலைவர்களுக்கு இத்தாலி பிரதமர் வரவேற்பு

ஜி7 மாநாட்டில் பங்கேற்பதற்காக இத்தாலி சென்றடைந்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை அந்நாட்டு பிரதமர் ஜார்ஜியா மெலோனி வரவேற்றுள்ளார்.

அத்துடன், பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக்), பிரான்ஸ் பிரதமர் இம்மானுவல் மேக்ரோன், ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா, கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் ஜெர்மனி ஜனாதிபதி ஆகியோரையும் இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி வரவேற்றுள்ளார்.

ஜி7 கூட்டமைப்பின் 50 ஆவது உச்சி மாநாடு நேற்று முதல் நாளை 15 ஆம் திகதி வரை இத்தாலியில் உள்ள அபுலியாவில் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.











# ஊடகவியலாளர் வீடு மீது தாக்குதல்: நான்கு பொலிஸ் குழுக்கள் களத்தில்

## பலரும் கண்டனம் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். அச்சுவேலியில் ஊடகவியலாளரின் வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் புகுந்து உடைமைகளுக்குத் தீ வைத்து வன்முறையில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநரின் பணிப்பின் பிரகாரம் வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரின் கீழ் நான்கு பொலிஸ் குழுக்கள் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அச்சுவேலி, பத்தமேனி காளி கோயில் பகுதியில் உள்ள ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீட்டின் மீது நேற்று அதிகாலை 12.15 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த ஐந்து பேர் கொண்ட வன்முறைக் கும்பல் தாக்குதல் நடத்தியது.

இதன்போது வீட்டுக்கு வெளியே இருந்த மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோ உள்ளிட்ட வாகனங்கள் மற்றும் சொத்துக்கள் ஆயுதங்களால் தாக்கப்பட்டதுடன் தீ வைத்தும் கொளுத்தப்பட்டன. அதனால் சுமார் 10 இலட்சம் ரூபாவுக்கு மேல் நட்டமேற்படுத்தப்பட்டது.

“திருநங்கைளைத் தவறாக சித்தரிக்காதே” என அச்சடிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் தாக்குதல் நடத்தப்பட்ட வீட்டில் போடப்பட்டிருந்தன.

இந்நிலையில், நேற்றுக் காலை பொலிஸாரின் தடயவியல் பிரிவினர் சம்பவ இடத்துக்கு வருகை தந்து தடயங்களைச் சேகரித்தனர்.

அத்துடன் பொலிஸ் விசேட கைரேகை நிபுணர்கள், பொருள்கள் மற்றும் வாகனங்களை எரிக்கப் பயன்படுத்திய பெற்றோல் கொண்டுவரப்பட்ட கொள்கலனை கைரேகை பரிசோதனைக்கு உட்படுத்தியபோது இருவரின் கைரேகை அடையாளங்கள் கிடைக்கப் பெற்றன.

வன்முறையில் ஈடுபட்ட கும்பல் வீதியூடாக தப்பிச் சென்ற சி.சி.ரி.வி. காணொளிகள் பொலிஸாருக்குக் கிடைத்தன. இவற்றைக் கொண்டும் பொலிஸார் விசாரணைகளைத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர்.



அதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஊடகவியலாளரின் வீட்டுக்குச் சென்று பார்வையிட்டதுடன், தாக்குதல் சம்பவம் ஊடகவியலாளருக்கு அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். எனவே, இந்த விடயம் தொடர்பில் அரசதரப்பினர், உரிய அதிகாரிகள் உடனடியாகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரினார்.

அத்துடன் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்றும், பிரச்சினை தொடர்பில் நேரில் பேசி ஆராயப்பட வேண்டும் என்றும், வன்முறை ஒருபோதும் தீர்வாகாது என்றும் அவர் கருத்து வெளியிட்டார்.

யாழ். ஊடக அமையத்தின் தலைவர் கு.செல்வகுமார் இந்தக் தாக்குதலுக்குக் கண்டனம் வெளியிட்டதுடன் சம்பவத்தில் ஈடுபட்ட அனைவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன்நிறுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்





# ‘கிழக்கை மீட்போம்!’ என மட்டக்களப்பைச் சூறையாடியோர் அம்பாறைத் தமிழர்களையும் சூறையாடுவதற்கு வருகின்றனர்!

## ‘தமிழ் உணர்வாளர்கள் அமைப்பு’ மற்றும் ‘ரணில் - 2024 செயலணி’ தலைவர் மோகன் எச்சரிக்கை

**(கனகராசா சரவணன்)**

‘கிழக்கை மீட்போம்’ என்ற பேர்வையில் மட்டக்களப்பில் பாதை அபிவிருத்தியில் தரகு பணத்தில் அள்ளிய பல கோடிகளை கொண்டு பாதைகளையும், போதைகளையும் காட்டி அம்பாறை மாவட்ட தமிழர்களை ஏமாற்ற நினைக்கும் சக்திகளிடம் விலை போகாது தமிழ் மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும் என ‘தமிழ் உணர்வாளர்கள் அமைப்பு’ மற்றும் ‘ரணில் – 2024 செயலணி’ தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் தெரிவித்தார்

அவர் நேற்று வியாழக்கிழமை ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தனித்து கிழக்கில் தமிழர்கள் தனியாக ஆள முடியாது என்று தெரிந்திருந்தும் தனித்துக் கிழக்கை வலியுறுத்தும் – பிரித்தாளும் – சக்திகள், அபிவிருத்தி என்ற போர்வையில் அம்பாறை மாவட்ட தமிழர்களை ஏமாற்றி, அவர்களின் வாக்குகளை கொள்ளையடித்து, தமது சுயலாக இருப்புக்காக தமிழர்களை அங்கு பூரணமாக இல்லாமல் செய்ய நடவடிக்கையை மேற்கொள்கின்றனர்.



‘கிழக்கை மீட்போம்!’ என தெரிவித்துக் கொண்டு, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல ஏக்கர் அரச காணிகளை தனது பினாமிகள் பெயரில் அபகரித்தது வருவதுடன் வீதி நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தகாரரிடம் 10 வீதம் தரகும் பணத்தை பெற்று பல கோடிகளைக் கொள்ளையடித்து வருகின்றனர்.

இந்த நிலையில் எந்த எந்த திணைக்களங்களில் இருக்கும் வளங்களை எவ்வாறு சூறையாடலாம் என்ற இலக்கில் அந்த அந்த திணைக்களங்களுக்கு தனக்கு வேண்டிய அதிகாரிகளை நியமித்து, அதனூடாக அரச வளங்களை சூறையாடி வருகின்றனர். வாகரை இறால் பண்ணை அமைக்கும் கம்பனியிடம் ஒரு தொகை பணத்தை வாங்கி கொண்டுள்ளனர்.

தொடர்ச்சியாக மாவட்டத்திலுள்ள அரசாணிகளை அபகரித்து வருவதுடன், அபிவிருத்தி என்ற பேர்வையில் 10 வீத தரகுப் பணம் ஊடாக கோடிக்கணக்கான பணத்தை அள்ளிக் கொண்டு அம்பாறை மாவட்டத் தமிழ் மக்களை விலை பேச முனைகின்றனர்.

இந்த மோசடி கும்பல் கடந்த காலத்தில் மஹிந்த ராஜபக்ஷக்களுடன் இருந்து தமிழ் மக்களை அழித்து அவர்களின் உடமைகளை சூறையாடியவர்கள்தான். நல்லவர்கள், வல்லவர்கள் என்று காட்டிக் கொண்ட கூட்டம் இப்போது தமது இருப்பை காப்பாற்ற வேறு வழியில்லாமல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் இந்த நாட்டை வழிநடத்த நல்ல தலைவர் எனத் தெரிவிக்கின்றனர்

இவ்வாறு காலத்துக்கு காலம் நாடகம் ஆடிவரும் – இந்த ‘கிழக்கை மீட்போம்’ என்றவர்கள், மட்டக்களப்பில் எல்லாவற்றையும் சூறையாடி விட்டு, இப்போது பணத்தை கொடுத்து உங்கள் வாக்குகளை கொள்ளையிட்டு அம்பாறை மாவட்டத்தையும் சூறையாடத் திட்டமிடுகிறார்கள். எனவே இவர்களிடம் அம்பாறை தமிழ் மக்கள் விலைபோகாது அவதானமாகவும் விழிப்பாகவும் இருக்கவேண்டும். – என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் கரையொதுங்கிய 2 மீனவரையும் மீட்டு வர முயற்சி





காலநிலை சீர்கேடு மற்றும் இயந்திரக் கோளாறு போன்றவை காரணமாக தமிழகத்தில் கரையொதுங்கிய அனலைதீவு கடற்றொழிலாளர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அனலைதீவு கடற்பரப்பில் இருந்து கடந்த ஜூன் மாதம் 10 ஆம் திகதி மாலை 5.00 மணியளவில் கடற்றொழிலுக்கு சென்ற இந்த இருவரும் கரை திரும்பாத காரணத்தினால் பதற்றம் ஏற்பட்டிருந்தது. அனலைதீவு கடற்பரப்பெங்கும் கடற்படையினர் மற்றும் கடற்றொழிலாளர்களால் தீவிர தேடுதல் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், தேடப்பட்டுவந்த இருவரும் தமிழக கடற்பரப்பில் கரையொதுங்கினர் எனத் தகவல் கிடைக்கப்பெற்றது.

இந்நிலையில் இருவரது குடும்பத்தினரும் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து இருவரையும் இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை எடுத்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ள நிலையில், கடற்றொழில் அமைச்சரினால் சம் ந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



# பொது வேட்பாளரால் சமஷ்டிக் கோரிக்கை அடிபட்டுப் போகுமா? அது சுமந்திரனின் சட்டத்தரணி மூளையின் கற்பனைப் பிராந்தி!

## இப்படி விளக்குகின்றார் விக்கி ஐயா

பொது வேட்பாளரை நிறுத்துவதால் எமது சமஷ்டிக் கோரிக்கை அடிபட்டுப் போகும் என்பது சுமந்திரனின் சட்டத் தரணி மூளையில் உதித்திருக்கும் ஒரு கற்பனைப்பிராந்தி.

– இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

தமது மாதத்திற்கொரு கேள்வி – பதில் அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார். அதன் முழு விவரம் வருமாறு:-

கேள்வி :- தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னிறுத்த வேண்டும் என்று நீங்கள் கூறிவருவது ஏன்? அதனால் ஏற்படும் நன்மைகள் யாவை? ஏன் அதைச் சிலர் எதிர்க்கின்றார்கள்?

பதில் :- தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை முன்நிறுத்த வேண்டும் என்று ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னர் 2011 அளவில் இருந்து கூறி வந்தவர் ஆசிரியர் திருநாவுக்கரசு அவர்கள். (திரு.மாஸ்டர் அவர்கள்).அக் கோரிக்கை அப்பொழுது தமிழ் மக்களால் ஆழமாகச் சிந்திக்கப்படவில்லை. நண்பர் சிவாஜிலிங்கம் அவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் நின்றிருந்தாலும் தமிழ் மக்களின் ஒரு பிரதிநிதியாக தமிழ் மக்களால் அரங்கேற்றப்படவில்லை.

ஆனால் 2009 இன் பின்னரான வடகிழக்கு அரசியற் களம், மத்திய அரசாங்கம் வடகிழக்கு தமிழ் மக்கள் விடயத்தில் நடந்து கொண்டுவந்த விதம், நாம் தொடர்ந்து ஏமாற்றப்பட்டுக் கொண்டு வரப்பட்ட விதம், முதலமைச்சராக நான் பெற்றுக் கொண்ட அனுபவம், இவை யாவும் என்னைச் சிந்திக்க வைத்தன. உதாரணத்திற்கு 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் வாரத்தில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அவரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் அவரின் அழைப்பின் பேரில் சுமந்திரனும் முதலமைச்சராக அப்போதிருந்த நானும் சந்தித்தோம். எமது மாகாணசபை சார்பான நடைமுறைக் கோரிக்கைகள் யாவை என்று அவர் கேட்டிருந்தார். நாம் அவற்றை எழுத்தில் அவரிடம் கையளித்தோம். சுமார் பத்து, பன்னிரண்டு விடயங்களைக் கோரியிருந்தோம். எல்லாவற்றையும் பரிசீலித்துப் பார்த்து எமக்கு அவற்றை நாம் கோரியவாறு நல்குவதாக அவரும் அவரின் செயலாளரான லலித் வீரதுங்கவும் பொறுப்பெடுத்தனர். நாமும் மகிழ்வுடன் விடைபெற்றுக் கொண்டோம். ஆனால் நாம் கோரிய எதுவும் வழங்கப்படவில்லை. உதாரணத்திற்கு அப்போதிருந்த சிங்கள இராணுவ ஆளுநரை மாற்றி ஒரு தமிழ்ப் பேசும் சிவில் சமூகப் பிரமுகரை அந்த இடத்திற்கு நியமிக்கும்படி கோரியிருந்தோம். அப்போதிருந்தவரின் காலம் ஜூலை மாதம் வரை நீடிக்கும் என்றும் அதன் பின்னர் எமது கோரிக்கை கட்டாயமாக நிறைவேற்றப்படும் என்றும் கூறியிருந்தார். நாம் ஜூலை வரை காத்திருந்தோம். திரும்பவும் அதே இராணுவ அலுவலரை ஜனாதிபதி மஹிந்த ஆளுநராக நியமித்தார்.

இவ்வாறு எமது கோரிக்கைகளுக்கு நேர்மாறாகவே மத்திய அரசாங்கம் நடந்து வந்து கொண்டிருப்பதை அவதானித்தேன். இந் நாட்டில் ஒரு இன வழியாட்சி நடைபெற்று வருவதை நான் அவதானித்தேன். தமிழ் மக்களின் காணிகள் அரசாங்க அனுசரணையுடன் பறிபோவதை அவதானித்தேன். வளங்கள் சூறையாடப்படுவதை அவதானித்தேன். எமக்கு 13 ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சொற்ப அதிகாரங்களையும் மத்தியானது தன்வசம் ஆக்கிக் கொண்டதை அவதானித்தேன். வடகிழக்கு தமிழ் மக்களை ஒரு சிறுபான்மையினமாக மத்திய அரசாங்கம் கருதுவதையும் நாம் வடகிழக்கில் பெரும்பான்மையினர் என்பதை அவர்கள் பொருட்படுத்தாது இருப்பதையும் அவதானித்தேன். நாம் நல்லாட்சி காலத்திலும் தொடர்ந்து ஏமாற்றப்பட்டுக் கொண்டு வரப்பட்டதையும் அவதானித்தேன். அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மத்திய அரசாங்கத்தை நம்பி "இதோ தீர்வு வருகின்றது", "இதோ வந்துவிட்டது" என்று பல தடவைகள் கூறி வந்து ஏமாற்றப்பட்டதையும் அவதானித்தேன்.

அப்போதுதான் திரு மாஸ்டரின் கோரிக்கையை நான் பரிசீலித்துப் பார்த்து அதில் உள்ள நன்மைகளை உள்வாங்கியிருந்தேன். காலம் கனிந்த போது அதே கோரிக்கையை நானும் முன் வைத்தேன்.

அதனால் ஏற்படும் நன்மைகள் எவை என்று பரிசீலித்துப் பார்த்தோமானால் –

முதலாவதாக, தமிழ் பொது வேட்பாளரை முன்நிறுத்துவது வடகிழக்கு மாகாணத் தமிழ்ப் பேசும் மக்கள் ஒரு தேசம் என்ற உண்மையை வெளிக்கொண்டு வருவதாக அமையும். அதாவது தமிழ்த் தேசீயம் என்று நாம் கூறுவதின் அர்த்தத்தை வெளிக்கொண்டு வர இது ஒரு சந்தர்ப்பத்தை வழங்கும்.

தமிழ்த் தேசீயம் என்றால் என்ன? CCPR என்ற குடியியல் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச ஒப்பந்தத்தின் உறுப்புரை ஒன்றின் கீழ் உலகின் "மக்கள் குழாம்" ஒவ்வொன்றும் சுயநிர்ணய உரித்துக் கொண்டவர்கள் என்று கூறுகின்றது. "மக்கள் குழாம்" என்று கூறும் போது அவர்களுக்கான சில தனித்துவங்கள் இருக்க வேண்டு

தொடர்ச்சி▼

# பொது வேட்பாளரால் சமஷ்டிக் கோரிக்கை அடிபட்டுப் போகுமா? அது சுமந்திரனின் சட்டத்தரணி மூளையின் கற்பனைப் பிராந்தி!

தொடர்ச்சி▲

மென்று சட்டம் எதிர்பார்க்கின்றது. அதாவது குறித்த மக்கள் அல்லது மக்கள் கூட்டம் அல்லது மக்கள் குழாமானது அதன் உறுப்பினர்களை ஒன்றிணைக்கும் சில குணாதிசயங்களைப் பெற்றிருக்க வேண்டும். வடகிழக்குத் தமிழ் மக்கள் சர்வதேச சட்டப்படி ஒரு “மக்கள் குழாம்” என்று ஏற்றுக் கொள்ள அவர்களுக்கிருக்கும் குணாதிசயங்கள் பலவுண்டு. அவர்களுக்கென்று ஒரு பொது மொழியுண்டு. அது தமிழ் மொழி. அடுத்து குறிப்பிட்ட வாழ்நிலப் பரப்புண்டு. அது தான் இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணங்கள். மேலும் குறிப்பிட்ட கலாசாரம் உண்டு வாழ்முறைகள் உண்டு. அவர்களின் வாழ்விடங்கள் நாட்டின் மற்றைய பாகங்களில் இருந்து தட்ப வெப்ப (Climate), நிலக்காட்சி (Landscape), மண்ணியல் (Geology), இடங்களின் தன்மை(Topography) ஏன் மதங்கள் (Religions) ரீதியாகவும் வேறுபட்டன. வடகிழக்கில் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்களே பெரும்பான்மையினர். பௌத்தர்கள் அண்மையில் அங்கே குடியேற்றப்பட்டவர்கள். வடகிழக்கில் ஆறுகள் இல்லை. குளங்களும் கிணறுகளுமே உண்டு.

எமது கலாசாரமும் பண்பாடும் எமது தமிழ் சூழலுக்கேற்ப, எமது தமிழ் இலக்கிய எதிர்பார்ப்புக்களுக்கேற்ப தனித்துவமான வளர்ச்சி பெற்று வந்துள்ளன. வடகிழக்குத் தமிழர்கள் தனித்துவமானவர்கள் என்பதால் “தேசம்” என்ற அடையாளத்தை CCPRஇன் ஏற்பாடுகளுக்கேற்ப பெற உரித்துடையவர்கள். பல தடவைகள் வடக்கு கிழக்கு பிரதேசங்களாவன தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களே என்ற உண்மை, உடன்பாடுகளிலும் ஒப்பந்தங்களிலும் இலங்கை அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியம் எனும் போது வடகிழக்கு தாயகத்தில் தமிழர்கள் ஒரு மக்கட் குழாம் என்பதும் அவர்களுக்கு சுயநிர்ணய உரித்து இருக்கின்றது என்பதும் ஏற்றுக் கொள்ளப்படும். எமது தனித்துவமே தமிழ்த் தேசியம். வடகிழக்கின் தனித்துவத்தை அடையாளம் காட்டாமலே தான் சிங்கள அரசியல் வாதிகள் இந் நாட்டிற்கு ஒற்றையாட்சி முறையைப் பெற்றுக் கொண்டனர். ஏழு மாகாணப் பெரும்பான்மையினர் இரு மாகாணப் பெரும்பான்மையினரைத் தம்முடன் சேர்த்து ஒன்பது மாகாண சிறுபான்மையினர் ஆக்கினர்.

ஒற்றையாட்சியைப் பெற்றதும் அவர்கள் இன ரீதியாக செயற்பட ஆரம்பித்தார்கள். எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க 1956இல் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வந்த போது, தாம் தமிழ் மக்களுக்குச் செய்த துரோகம் பற்றி உணர்ந்து கொண்டு தமிழ் மொழி நியாயமான பிரயோகம் என்ற (Reasonable use of Tamil) சட்ட வரைவைக் கொண்டு வந்தார். ஆனால் புத்த பிக்குமார் சிலர் பண்டாரநாயக்கவின் ரொஸ்மிட் பிளேஸ் இல்லத்திற்குச் சென்று ஆர்ப்பாட்டம் செய்து குறித்த சட்ட வரைவை அப்போதைய பிரதமரை நிராகரிக்கச் செய்தனர்.

ஆகவே தமிழ் பொது வேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் முன்னிறுத்துவது நாம் ஒரு “தேசம்“ என்ற உண்மையை வெளிக் கொண்டு வர உதவும். நாம் எமது மாகாணங்களில் பெரும்பான்மையினர் என்ற அடையாளத்தை நிலை நிறுத்தும்.

அடுத்து சமூக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தமிழ் மக்கள் சிந்தித்துப் பலவித கருத்துப் பரிமாற்றங்களின் அடிப்படையில் ஒரு தமிழ் பொது வேட்பாளரை தேர்தலில் முன் நிறுத்துவது சிதறுண்டிருக்கும் வடக்கு கிழக்குத் தமிழ் மக்கள் ஒன்றிணைய வழிவகுக்கும்.

எமது தமிழ்க் கட்சிகள் பல இருந்தாலும் அவற்றின் அரசியல் குறிக்கோள் ஒன்றே. அது இலங்கையின் ஒற்றையாட்சி முறையை மாற்றி அமைப்பதே. முன்னைய தமிழ் காங்கிரஸ் ஒற்றையாட்சி முறையை ஏற்றுக் கொண்டிருந்தது. ஆனால் அதன் வழிநிற்கும் தமிழ் தேசிய மக்கள் கூட்டணி சமஷ்டி முறையையே தேர்ந்தெடுத்துள்ளது. எமது தமிழ் மக்கள் கூட்டணி கூட்டு சமஷ்டி முறையைத் தேர்ந்தெடுத்துள்ளது. எனினும் அடிப்படையில் தமிழ்க் கட்சிகள் யாவும் ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்கு எதிரானவை. அவ்வாறான பொதுக் குறிக்கோளை முன் வைத்து தமிழ்க் கட்சிகள் யாவும் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கக் கூடிய ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும். தமிழ் மக்களிடையே ஒரு அடிப்படை ஒற்றுமையை ஏற்படுத்த தமிழ் பொது வேட்பாளர் வழி வகுப்பார்.

மூன்றாவதாக ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களுக்குத் தரப்படும் விசேட சலுகைகள், தமிழ்ப் பொது வேட்பாளர் அரச செலவில் தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும், புலம்பெயர் மக்களையும், உலக நாடுகளின் மக்களையும் தொலைக் காட்சி மூலமாக சந்திக்க ஒரு வாய்ப்பளிக்கும். மும் மொழிகளிலும் தமிழ் பொது வேட்பாளர் பேசக் கூடியவர் என்றால் தமிழர்களுக்கு நேர்ந்த அனர்த்தம் பற்றியும் இழைக்கப்பட்ட அநீதி பற்றியும் யாவர் மத்தியிலும் வெளிக் கொண்டு வரலாம். முக்கியமாக சிங்கள மக்களினதும், சிங்கள மொழி பற்றியதுமான சில தொல் பொருளியல் விடயங்கள் சிங்கள மக்களை சென்றடைய தமிழ் பொது வேட்பாளர் அந்தஸ்து வழி வகுக்கும்.

நான்காவதாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை முன்னிறுத்தும், மற்றும் வெளிக் கொண்டு-வரும் ஒரு களமாக தமிழ் பொது வேட்பாளர் நிலையை நாம் மாற்றலாம். முக்கியமாக வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் தமது மக்கள் தீர்ப்பை (Referendum) சர்வதேச வழி நடத்தல் ஊடாகப் பெற எத்தனிக்கின்றார்கள் என்ற கருத்தை ஊறறிய, நாடறிய, உலகறிய பறை சாற்ற தமிழ் பொது வேட்பாளர் உதவி புரிவார். வடகிழக்கு தமிழ் மக்களின் மனோநிலை என்ன என்பதை வெளிக் கொண்டு வர மக்கள் தீர்ப்பானது உதவும். அதனை சர்வதேசம் நடத்த வேண்டும் என்ற கருத்தை வெளிக் கொண்டுவர தமிழ்ப் பொது வேட்பாளர் உதவுவார். அவருக்குத் தமிழ் மக்கள் பெருவாரியாக வாக்களிப்பதன் மூலம் ஜனாதிபதித் தேர்தலை எம் சார்பில் திசை மாற்றலாம். சிங்கள வேட்பாளர்கள் எவ்வெந்தக் கருத்துக்களை மக்கள் முன்வைத்தாலும் தமிழ் மக்களின் கருத்துக்கள், அபிலாஷைகள், குறிக்கோள்கள், எதிர்பார்ப்புக்கள் இவை தான் என்ற கொள்கை விளக்க அறிவிப்பை உலகறியச் செய்யலாம்.எமது கொள்கை விளக்க உரைகள் தமிழ் மக்கள் பரந்து வாழும் நாடுகளில் எல்லாம் ஒளி, ஒலி மூலமாக எதிரொலிக்கும். வடகிழக்கினுள் சிறைபட்டிருக்கும் எமது சிந்தனைகள் உலகெங்கிலும் சிதறடித்துப் பறக்க தமிழ் பொது வேட்பாளர் உதவி புரிவார்.

ஐந்தாவதாக தமிழ் பொது வேட்பாளர் தேர்தலில் வெல்ல போட்டியில் கலந்து கொள்ளப் போவதில்லை. போட்டி முடிவு அவருக்கு முக்கியமல்ல. போட்டியில் கலந்து கொண்டு மக்களை ஒன்றிணைப்பதே அவரின் கடமை யாகும். இன்னாரை ஒரு பொது வேட்பாளராகத் தமிழர்கள் தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்ற உண்மையே சிங்கள வேட்பாளர்கள் தமிழர்களுக்கு எது, எதனைத் தருவார்கள் என்ற அவர்களின் உள்ளக் கிடக்கைகளை வெளிக் கொண்டு வர உதவும். அவற்றை வைத்துப் பேரம் பேச நாம் முனையக்கூடாது. அவர்களின் சிந்தனைகளை உத்தியோக பூர்வமாக சிங்கள வேட்பாளர்கள் வெளிக் கொண்டு வரச் செய்ய தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற அந்தஸ்து உதவி புரியும். தேர்தல் முடிந்து வெற்றியாளர் தெரிவிக்கப்பட்ட பின்னர் தேர்தலின் போது அவர் தமிழர்கள் பற்றி

தொடர்ச்சி▼

# பொது வேட்பாளரால் சமஷ்டிக் கோரிக்கை அடிபட்டுப் போகுமா? அது சுமந்திரனின் சட்டத்தரணி மூளையின் கற்பனைப் பிராந்தி!

தொடர்ச்சி ▲

வெளிக் கொண்டு வந்த விடயங்களைத் தெரியப்படுத்தி அவரிடம் விளக்கம் கேட்கலாம். அவர்கள் தருவதாகக் கூறியவற்றைத் தரமறுத்தால்

அவர்களின் இரட்டை வேடம் வெளிக் கொண்டுவரப்படலாம். ஆனால் பொது வேட்பாளரின் பங்கு யாவர்க்கும் எமது நிலைப்பாட்டையும் எதிர்பார்ப்புக்களையும் இந்தத் தேர்தலைத் தளமாக வைத்துத் தெரியப்படுத்துதலேயாகும்.

அடுத்து தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு ஏன் எதிர்ப்புக்கள் வெளிவந்துள்ளன என்பதை ஆராய்வோம்.

முதலில் சம்பந்தன் அவர்களின் “ஒஸ்லோ உடன்பாடு“ பற்றிப் பார்ப்போம். ஒஸ்லோ உடன்பாடு என்று எதுவுமே உண்மையில் இல்லை. அது இருதரப்பார் அறிவிப்பு அல்லது அறிக்கையாகும் (Communique). இருதரப்பாராலும் இவ்வாறாக கூறப்பட்டது என்று பதிவிற்காக எழுத்தில் இடப்பட்ட ஓர் ஆவணமே அன்றி தரப்பாரிடையிலான உடன்பாடு அல்ல. அது தற்போது வழக்கொழிந்து போய்விட்டது. அதன் அடிப்படையில் அரசாங்கத்தை “அப்படிச் செய்” இப்படிச் செய்“ என்று நிர்ப்பந்திக்க முடியாது. சம்பந்தன் அவர்கள் இந்த தள்ளாத காலத்திலும் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதை எதிர்க்கின்றார் என்றால் அதற்கான காரணங்கள் தமிழர்தம் அரசியல் காரணங்களாக இருக்க முடியாது. தமிழ் மக்கள் அதற்கான காரணங்களை ஊகித்து அறிய வேண்டும்.

அடுத்து சுமந்திரனின் அங்கலாய்ப்பு. பொது வேட்பாளரை நிறுத்துவது ஒரு விஷப் பரீட்சை என்பதே அவரின் கருத்து. காரணம் ஏற்கனவே சமஷ்டி வேண்டும் என்று கட்சிகள் தீர்மானம் எடுத்துள்ளன. பொது வேட்பாளருக்குப் போதிய ஆதரவு கிட்டாவிடில் எமது சமஷ்டித் தீர்வுக்கான அத்தியாவசியமும் பலமும் அடிபட்டுப் போய்விடும் என்பது அவரின் கருத்து.

இது ஒரு அத்திவாரமில்லாத அங்கலாய்ப்பு. தமிழ் மக்களின் சமஷ்டிக் கோரிக்கை அன்றும் இருந்தது. இன்றும் இருக்கின்றது.

எமக்கு பிரிவினையோ சமஷ்டியோ கிடைக்கும் வரையில் அல்லது எமது பிரதேசங்கள் பிறிதொரு நாட்டின் ஆட்சிக்குக் கீழ் வரும் வரையில் என்றும் இருக்கும். அப்படி வந்தாலும் நாம் அங்கும் சமஷ்டியையே கேட்போம். பொது வேட்பாளரை நிறுத்துவதால் எமது சமஷ்டிக் கோரிக்கை அடிபட்டுப் போகும் என்பது சுமந்திரனின் சட்டத்தரணி மூளையில் உதித்திருக்கும் ஒரு கற்பனைப்பிராந்தி. உண்மையில் எமது நிலையை இன்னும் ஸ்திரப்படுத்தி எம்மை சமஷ்டியை நோக்கி எடுத்துச் செல்ல வல்லதே தமிழ் பொது வேட்பாளர் என்ற பதவிநிலை. வடகிழக்கு மக்களின் மக்கள் தீர்ப்பைப் பெற சர்வதேச நாடுகள் முன்வர வேண்டும் என்று கோருவது எவ்வாறு சமஷ்டிக் கோரிக்கையை வலுவற்றதாக்கும்? நாம் சமஷ்டியைக் கோரி தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தவில்லையே! நாம் எமது குறைகளை, நிலைகளை, நிர்ப்பந்தங்களை அகில உலகிற்கும் எடுத்துரைக்க உள்ளோம். “சமஷ்டியைத் தா“ என்று தமிழ் பொது வேட்பாளர் கேட்கப் போவதாக யார் சுமந்திரனுக்குக் கூறினார்களோ நான் அறியேன்.

அடுத்து அவர் அரசியல் தலைவர்கள், அரசியல் கட்சிகளே இதனை முன்னெடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார். சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஆலோசனைகளை மட்டும் வழங்கலாம் என்றுள்ளார்.

ஒரு சமூகத்தின் சமூக சேவையாளர்கள் / செயற்பாட்டாளர்கள், அரசியல்வாதிகளுக்கு வாக்குகள் வழங்கும் மக்களிடையே இருந்து வருகின்றவர்கள். அவர்கள் அந்நியர்கள் அல்லர். சுமந்திரன் மனதிலே ஒரு தப்பபிப்பிராயம் குடிகொண்டுள்ளது. ஒருவர் எப்பாடுபட்டாவது (அதாவது எந்த வித ஆரியக் கூத்தாடியாவது) நாடாளுமன்ற உறுப்பினராக வந்தால் அதன் பின் மக்களுக்குப் பேச இடமில்லை என்று நினைக்கின்றார். மக்களின் மனம் அறியாமல் அவர்களின் நல உரித்துக்களுக்கு எதிராக ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் நடந்து கொண்டால் அடுத்த தேர்தல் வரையில் மக்கள் அது பற்றி எதுவும் பேச முடியாது என்ற வகையில் அவரின் கருத்தை முன்வைத்துள்ளார். நாம் யாவரும் பணி செய்வது எமது தமிழ் மக்களின் இன்றைய மற்றும் வருங்கால நலன் கருதியே.

சுமந்திரன் கருத்துப்படி ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் தேர்தலில் வென்றுவிட்டால் அவர் அடுத்த ஐந்து வருடங்களுக்கு தான் தோன்றித்தனமாய் நடந்து கொள்ளலாம் என்பதே. இவ்வாறு நினைத்தவர்கள் தான் தமது மக்களிடம் கேட்காமல் ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்துடன் கதைத்துப் பேசிப் பல சுய நன்மைகளைப் பெற்று வந்துள்ளார்கள்.

இன்று மக்களும் தமிழ் அரசியல்த் தலைவர்களும் சேர்ந்தே பொது தமிழ் வேட்பாளரை முன்நிறுத்த முன் வந்துள்ளார்கள். அதில் எந்தத் தவறும் இல்லை. மத்திய அரசில் பதவி வகிக்கும் ஒருவருக்கு ஜால்ரா அடிக்க எண்ணி தமது மக்களைப் புறக்கணிக்க முன்வருவோரை தமிழ்ச் சமூகம் மன்னிக்காது. மக்கள் சார்பில் இந்த செயற்பாட்டில் ஈடுபடுவதாக இருந்தால் சுமந்திரன் எம்முடன் சேர்ந்து பயணிக்கட்டும். இல்லையேல் ஒதுங்கியிருக்கட்டும். சிங்கள வேட்பாளர்கள் நலன் கருதி தமிழ் மக்களின் நலன்களை விற்காது இருக்குமாறு அன்புடன் அவரைக் கேட்டுக் கொள்கின்றேன். – என்று உள்ளது.

# அலங்கார மீன்வகைகளின் ஏற்றுமதியின் மூலம் 4 வருடங்களில் ரூ.2632 மில்லியன் வருமானம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தகவல்



அலங்கார மீன் ஏற்றுமதி மூலம் கடந்த நான்கு வருடங்களில் 2632 மில்லியன் ரூபா (8.52 மில்லியன் அமெரிக்க டொலர்) வருமானம் நாட்டுக்குக் கிடைத்திருப்பதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கடந்த கடற்றொழில் அமைச்சில் இடம்பெற்று நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு மேலும் அவர் தெரிவித்தாவது:-

அலங்கார மீன் வளர்ப்புத் துறையை அபிவிருத்தி செய்வதற்காக கடற்றொழில் அமைச்சினால் பல்வேறு திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

அலங்கார மீன் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இலங்கை நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் தாய் மீன்கள் வழங்கப்படுகின்றன. பயிற்சி மற்றும் வர்த்தக பொருள்காட்சிகள் ஏற்பாடு செய்து அவர்களுக்கு சந்தை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. நவீன தொழில்நுட்ப அறிவு வழங்கப்படுகிறது. மீன் உணவு விநியோகிக்கப்படுகிறது. மாணவர்கள் மத்தியில் அலங்கார மீன் வளர்ப்பை ஊக்குவிப்பதற்காக பாடசாலைகளில் அலங்கார மீன் வளர்ப்பு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அபாயகர மீன்கள் இறக்குமதி செய்வதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் மாவட்ட ரீதியாக அலங்கார மீன் வளர்ப்பு சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. – இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

### சோழமண்டல குளத்தின் கீழ் பயிர் செய்கையில் ஈடுபட்டு வருகின்ற

# இலுப்பைக்கடவை விவசாயிகளுக்குக் காணிகளுக்குரிய ஆவணங்களை வழங்கிய பின்பு மன்னாருக்கு வாருங்கள்!

## மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்


பொது அமைப்புக்களின் ஒன்றியம்
மன்னார் மாவட்டம்
Federation Of Community Based Organizations
Mannar District
13.06.2024




**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இலுப்பைக்கடவை சோழமண்டல குளத்தின் கீழ் கடந்த 30 ஆண்டுகளாக காணியற்ற நூறு ஏழை விவசாயிகள் பயிர் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு இதுவரை காணிக்குரிய ஆவணங்கள் எவையும் வழங்கப்படவில்லை.

எனவே எதிர்வரும் 16 ஆம் திகதி மன்னார் மாவட்டத்திற்கு வருகை தருவதற்கு முன்னதாக அவர்களுக்கு காணி வழங்கும் உத்தரவை வழங்கி விட்டு வருகை தருமாறு மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதியிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்றைய தினம் வியாழக்கிழமை அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் கூறப் பட்டவை வருமாறு:-

கடந்த 30 ஆண்டுகளாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இலுப்பைக்கடவை சோழமண்டல குளத்தின் கீழ் காணியற்ற நூறு ஏழை விவசாயிகள் பயிர் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுக்கு இதுவரை காணிக் குரிய ஆவணங்கள் எவையிம் வழங்கப்படவில்லை. நான்கு ஜனாதிபதிகளிடம் கோரிக்கை விடுத்தும் இதுவரை நடைபெறவில்லை. எதிர்வரும் 16 ஆம் திகதி ஜனாதிபதி மன்னார் மாவட்டத்திற்கு வருகை தர இருக்கிறார் என அறிகிறோம்.

எனவே மன்னார் மாவட்டத்திற்கு வருகை தருவதற்கு முன்னதாக இவர்களுக்கு காணி வழங்கும் உத்தரவை வழங்கி விட்டு வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

காணி சீர்திருத்த அதிகார சபை லஞ்சம் வாங்குபவர்களுக்கு மட்டும் காணி வழங்கி வருகிறது. பல ஆண்டுகளாக பல வழிகளிலும் வேண்டுகை விடுத்தும் அதிகாரிகள் செவி சாய்ப்பவர்களாக இல்லை. தங்களுக்கும் ஏற்கனவே மூன்று தடவை கடிதம் எழுதியிருந்தோம்ம் அதனால் எந்தப் பயனும் ஏற்படவில்லை. இந்த நாட்டில் சமூக சம நீதி என்பது எந்த விடயத்திலும் நடைமுறைப்படுத்தியதாகத் தெரியவில்லை. இலஞ்சமும் ஊழலும் வியாபித்துள்ளன.

அதனால்தான் இந்த நாடு இவ்வளவு மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் மீள முடியாமல் சிக்கித் தவிக்கிறது. எனவே மன்னாருக்கு வருவதற்கு முன்னர் இக்காணி வழங்குவதற்குரிய அனுமதியை அதிகாரிகளுக்கு வழங்கி விட்டு வருமாறு கேட்டுக் கொள்வதோடு, இந்த காணி வழங்குவதில் எந்த விதமான சட்ட ரீதியான தடைகளும் இல்லை என்பதையும் சுட்டிக் காட்டுகிறோம்.

குறிப்பாக வனத்திணைக்களத்தினதோ, வனவிலங்குகள் திணைக் களத்தினதோ, தொல்பொருள் திணைக் களத்தினதோ இல்லை. அலுவலக நிர்வாக நடைமுறைகளுக்கு அமைவாக சகல ஆவணங்களும் பல வருடங்களுக்கு முன்பே காணி சீர்திருத்த அதிகார சபையிடம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆகவே இதற்கு தாங்கள் உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுப்பீர்கள் என்று நம்புகின்றோம். - என அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புத்தலவில் சிறுமியை கடத்தி நிலக்கீழ் அறைக்குள் அடைத்து வைத்திருந்த நால்வருக்கு விளக்கமறியல்

புத்தல பகுதியில் 14 வயதான சிறுமியை கடத்திச்சென்ற நால்வருக்கு எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நால்வரும் வெல்லவாய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சில நாள்களுக்கு முன்னர் சிறுமியின் வீட்டிற்கு சென்ற சந்தேகநபர்கள், தந்தையை தாக்கிவிட்டு சிறுமியை கடத்திச்சென்றுள்ளனர்.

கட்டுகல்லகே பகுதியில் உள்ள வீடொன்றின் நிலக் கீழ் அறைக்குள் சிறுமி அடைத்து வைக்கப்பட்டிருந்த போது, பொலிஸாரால் மீட் கப்பட்டுள்ளார்.





# தேசிய மட்ட பாடசாலை கடற்கரை கபடிப் போட்டியில் கலக்கிய திருகோணமலை பெண்கள் பாடசாலைகள்





(திருகோணமலை நிருபர்)

தேசிய மட்டபாடசாலைகளுக்கிடையிலான கடற்கரை கபடிச் சுற்றுப் போட்டியில் இரு வேறு வயதுப் பிரிவிகளில் திருகோணமலை – கந்தளாய் பெண்கள் பாடசாலை அணிகள் சம்பியன் பட்டங்களைச் சுவீகரித்துள்ளன.

18 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான பிரிவில் கந்தளாய் மகா வித்தியாலயமும், 20 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான பிரிவில் திருகோணமலை அக்ரபோதி தேசிய பாடசாலையும் சம்பியன் பட்டங்களைத் தமதாக்கியுள்ளன.

இலங்கை பாடசாலை கபடி சங்கம் நடத்திய இப்போட்டிகள், முதல் முறையாக கடற்கரை கபடி போட்டிகளாக நடைபெற்றன.

இப்போட்டிகளில், வடக்கு, கிழக்கு உட்பட 25 மாவட்டங்களின் 43 ஆண்கள் பாடசாலை கபடி அணிகளும், 30 பெண்கள் பாடசாலை கபடி அணிகளும் பங்குபற்றின.

போட்டிகள் 18 வயது மற்றும் 20 வயதிற்குட்பட்ட பிரிவுகளில் நடாத்தப்பட்டன.

சனியன்று ஆரம்பமான இச்சுற்றுப் போட்டிகள் ஞாயிறன்று நிறைவு பெற்றன.

இறுதிப்போட்டிகளின் பெறுபேறுகள் வருமாறு –

**ஆண்கள் - 18 வயதுப் பிரிவு**

**முதலாம் இடம் :** அம்பாறை அல்–அஸ்கர் மகா வித்தியாலயம்

**இரண்டாம் இடம் :** மாவனல்லை நிவி சந்த தேசிய பாடசாலை

**மூன்றாம் இடம் :** அம்பாறை அல்–மதீனா முஸ்லீம் மகா வித்தியாலயம்

**ஆண்கள் - 20 வயதுப் பிரிவு**

**முதலாம் இடம் :** அம்பாறை அல்–மதீனா முஸ்லிம் மகா வித்தியாலயம்

**இரண்டாம் இடம் :** வவுனியா பெரக்கும் மத்திய கல்லூரி

**மூன்றாம் இடம் :** யாழ்ப்பாணம் ஹாட்லி கல்லூரி

**பெண்கள் - 18 வயதுப் பிரிவு**

**முதலாம் இடம் :** திருகோணமலை கந்தளாய் மகாவித்தியாலயம்

**இரண்டாம் இடம் :** காலி ஜின ஆனந்தசார தேசியப் பாடசாலை

**மூன்றாம் இடம் :** திருகோணமலை அக்ரபோதி தேசிய பாடசாலை, கந்தளாய்.

**பெண்கள் - 20 வயதுப் பிரிவு**

**முதலாம் இடம் :** திருகோணமலை அக்ரபோதி தேசிய பாடசாலை, கந்தளாய்

**இரண்டாம் இடம் :** யாழ்ப்பாணம் தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

**மூன்றாம் இடம் :** மட்டக்களப்பு கிரான் மத்திய கல்லூரி.





# இன்றைய ராசி பலன்கள் - 14.06.2024




உங்கள் அணுகுமுறையில் சிறிது கவனம் தேவை. உங்கள் பிரியமான வர்களுடன் பேசும் போது கவனமாகப் பேசவும். முக்கியமான முடிவுகளை இன்று எடுக்காதீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிப்பது கடினமாக இருக்கும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப் படுத்துவதை தவிர்க்கவும். இதனால் நல்லுறவை உரு வாக்க முடியும்.

இன்று அதிக செலவினங்கள் காணப்படும். உங்கள் நிதியை சமாளிப்பது இன்று கடினமாக இருக்கும். பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

சளி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப் படும். குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்த்தல் நல்லது




வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளதால் ஒரு உரையாடலை தொடங்குமுன் ஒரு முறைக்கு இருமுறை யோசிக்க வேண்டும். விட்டுக்கொடுக்கும் அணுகுமுறை தேவை. சிறிய விஷயங்களை பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

உங்கள் பணகளை சாமார்த்தியமாக அற்ற வேண்டும். இல்லையெனில் பணியில் தரத்தை விட்டுக்கொடுக்க நேரும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற் கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்காது. தேவை யற்ற செலவுகள் ஏற்படும். இது உங்களுக்குக் கவ லையை அளிக்கும்.

சளி அல்லது முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று மகிழ்ச்சிகரமாக நாளாக இருக்கும். உங்கள் செயல்களை கவன மாக ஆற்றுவீர்கள். உங்கள் நண்பர் களின் ஆதரவைப் பெறுவீர்கள். இன் றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை சில கொள்கைகளுடன் ஆற்றுவீர்கள். உங்கள் செயல்திறன் நிரூபணமாகி வளர்ச்சி கிடைக்கும். உங்களுக்கு பாராட்டு கிடைப் பதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான உணர்வுடன் அணுகுவீர்கள். இதனால் திருப்தி உண்டாகி உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

இன்று அதிக பண வரவு காணப்படும். பணத்தை சேமிக்கும் வாய்ப்பு கிடைக்கும். பயனுள்ள திட்டங்களில் முதலீடு செய்வீர்கள்.




இன்று காணப்படும் பதற்றத்தைச் சமாளிக்க சமநிலையான அணுகுமுறை தேவை. திருப்தியான மன நிலை ஏற்பட மனதை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

பணியிடச் சூழல் சிறிது கடினமாக காணப்படும். சகபணியாளர்கள் ஆதரவு கிடைக்காது. இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். அவர்களோடு நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

உங்கள் மனதில் ஏதோ இழந்தது போல உணர் வீர்கள். உங்கள் துணையுடன் சகஜமாகப் பழக வேண்டும்.

இன்று அதிக பண வரவு காணப்படாது. அப்படியே வந்தாலும் தேவையற்ற செலவுகளைச் சந்திப்பீர்கள்.

இன்று இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது. சிகிச்சை மேற்கொள்வதன் மூலம் உங்களை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம்.




இன்று தேவையற்ற வாக்குவாதங்கள் ஏற்படும். இது உங்களுக்குக் கவலை அளிக்கும். அமைதியாக இருப்பது சிறந்தது.

உங்கள் பணிகள் இன்று கடினமாக காணப்படும். சகபணியாளர்களின் எதிர்ப்பு உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும்.

இன்று உங்கள் பொறுமை இழந்து காணப்படு வீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே சூடான விவாதங்கள் ஏற்படலாம். நட்புடன் இருப்பது நல்லது.

நிதி வளர்ச்சியில் சில கட்டுப்பாடுகள் காணப்படும். முடிந்த அளவு சேமிக்க வேண்டும். தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை உண் டாக்கும்.




இன்று மகிழ்ச்சியான நாளாக காணப்படாது. என்றாலும் பொறுமை நன்மை தரும். எதையோ இழந்தது போன்ற உணர்வு உங்கள் மனதில் ஏற்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது சில தடைகளை எதிர் கொள்வீர்கள். உங்கள் பணிகளை முறையாகத் திட்டமிடுவது இன்று மிகவும் அவசியம்.

மகிழ்ச்சியை தக்க வைக்க இன்று நீங்கள் உங்கள் துணையுடன் சகஜமாகப் பழக வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். நிதிநிலை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். திட்டமிடுவது அவசியம்.

தேவையற்ற குழப்பங்கள் உங்கள் ஆரோக்கியத் தைக் கெடுக்கும். ஓய்வாக அமைதியாக இருப்பது நல்லது.




இன்று சிறப்பான நாள். உங்கள் சுய முயற்சி மூலம் வளர்வீர்கள். உங்களிடம் காணப்படும் உறுதியின் காரணமாக உங்கள் முயற்சியில் வெற்றி பெறு வீர்கள். பிறருடன் சிறப்பாக தொடர்பு கொள்வீர்கள்.

பணி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் பணி களை திறமையாகக் கையாள்வீர்கள். நீங்கள் முறை யான அணுகுமுறை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பாகவும் உண்மையா கவும் நடந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணை மகிழ்ச்சியடைவார்.

இன்று வருமானம் அதிகமாகக் காணப்படும். சேமிப்பு உயரும் வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நம்பிக்கை உணர்வு காரணமாக நீங்கள் திடமாக இருப்பீர்கள்.




இன்றைய நாள் சமநிலையோடு இருக்கும். உங்கள் பெற்றோரின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். இன்று திருப்தியான நாளாக இருக்கும்.

உங்கள் நேர்மை உங்கள் மேலதி காரிகளால் பாராட்டப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். ஆடு உங்கள் சக பணியாளர் களின் கவனத்தை ஈர்க்கும். உங்கள் உள்ளிருக்கும் திறமைகளை வெளிக்கொணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிபடுத்துவீர்கள். இந்தப் போக்கின் காரணமாக காரணமாக உங்கள் மீதான மதிப்பு உயரும்.

உங்கள் நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். இன்று அதிக பணம் சேமிக்கும் வாய்ப்பு உள்ளது. இதனால் திருப்தியான உணர்வு காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 14.06.2024




ஆன்மீகச் சொற்பொழிவுகளை கேட்டல், இறைவழிபாடு போன்றவற்றில் ஈடுபடுவதன் மூலம் இன்று ஆறுதல் கிடைக்கும். உங்கள் பேச்சில் கவனம் தேவை. இன்று நண்பர்களை சந்திப்பதை தவிர்க்கவும்.

அதிகப் பணிகள் காரணமாக இன்றைய பணிகள் தள்ளிப் போகும். குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க புத்திசாலித்தனமாக பணிகளை ஆற்ற வேண்டும்.

இன்று நீங்கள் விரும்பும் மகிழ்ச்சி கிடைக்காது. உங்களின் மாறுபடும் மனநிலையை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். இது இருவருக்கும் இடையிலான உறவை பாதிக்கும் என்பதால் இதனைத் தவிர்த்தல் நல்லது. பயணத்தின்போது பண இழப்புக்கான வாய்ப்புகள் உள்ளது. பணத்தை கையாளும் போது கவனம் தேவை.




இன்று அனுகூலமான நாளாக இருக்கும். இன்று சமநிலையோடு காணப்படுவீர்கள். இன்று புதிய தொடர்புகள் மற்றும் நண்பர்களை ஏற்படுத்திக் கொள்வீர்கள். பிறருடன் கலந்து பேசி மகிழ்வீர்கள்.

கடினமான பணிகளிக் கூட எளிதாகச் செய்வீர்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக உண்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் இருவருக்கும் இடையே நல்லுறவு காணப்படும்.

உங்கள் நிதிநிலை திருப்திகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

உங்கள் தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று எளிய பணிகளைச் செய்வது கூட கடினமாக உணர்வீர்கள். உங்கள் ஆற்றல் இழந்து காணப்படுவீர்கள். இதனால் விளைவுகளில் பாதிப்பு ஏற்படும். ஓய்வாக இருக்க வேண்டும்.

உங்கள் பணியில் சில அபாயங்களை சந்திக்க நேரும். இது உங்களுக்கு கவலையை உருவாக்கும் பணிகளை கவனமாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும்போது எச்சரிக்கை தேவை. உறவின் நல்லிணக்கம் பாதிக்கும் வகையில் சில தேவையற்ற பேச்சுக்கள் ஏற்படலாம்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று நீங்கள் பணம் இழக்க நேரலாம்.

தொண்டை வலியால் அவதிப்படுவீர்கள். குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்கவும்.




இன்று அதிர்ஷ்டமான நாள். நீங்கள் மிகுந்த முயற்சி செய்து அதில் வெற்றியும் காண்பீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி இன்றைய நாளை சிறப்பாக ஆக்குவீர்கள்.

உங்கள் சமயோசித புத்தி இன்றைய பணிகளை எளிதாக்கும். வெற்றி பெற வேண்டும் என்ற உங்கள் மன நிலை உங்கள் பணியில் பிரதிபலிக்கும்.

உங்கள் துணையிடம் உண்மையாக இருப்பீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

நிதிநிலையில் இன்று வளர்ச்சி காணப்படும். இலாபகரமான திட்டத்தில் இன்று நீங்கள் பணத்தை முதலீடு செய்யலாம்.

உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park



# மலையக, கரையோர மார்க்கங்களில் ரயில் போக்குவரத்து நேற்றுப் பாதிப்பு

மலையக மற்றும் கரையோர மார்க்கங்களிலான ரயில் போக்குவரத்துகள் ரயில்கள் தடம்புரண்டமையினால் பாதிக்கப்பட்டுள்ளன.

பாணந்துறை ரயில் நிலையத்தை அண்மித்து நேற்று ரயிலொன்று தடம்புரண்டுள்ளது.

இதன் காரணமாக கரையோர மார்க்கத்தில் ரயில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாக ரயில்வே பிரதி பொது முகாமையாளர் எம்.ஜே. இந்திபொலகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இருந்து பாணந்துறை நோக்கி பயணித்த ரயிலே இவ்வாறு தடம்புரண்டுள்ளது.

இதேசமயம் நேற்று மாலை 3.30 மணியளவில் மலையகப் பாதையில் வடகொட மற்றும் தலவாக்கலை நிலையங்களுக்கு இடையில் ரயில் ஒன்று தடம் புரண்டுள்ளதாக நாவலப்பிட்டி ரயில்வேக் கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது.

பதுளையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த 1008 என்ற அதிவேக பயணிகள் ரயிலே தடம் புரண்டுள்ளதாக நாவலப்பிட்டி ரயில்வே கட்டுப்பாட்டு அறை தெரிவித்தது.

இதன் காரணமாக மலையக ரயில் சேவை தடைபட்டுள்ளது. நேற்று இரவு கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை மற்றும் பதுளையில் இருந்து கொழும்பு கோட்டை வரை இயங்கும் ரயில்களின் பயணிகள் சேவை தடைப்பட்ட பகுதிகளை அண்டிய நிலையங்களில் இருந்து பஸ்கள் மூலம் ஏற்றி இறக்கப்பட்டனர்.

ரயில் தடம் புரண்ட இடத்தில் பயணிகளுக்கு வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தலவாக்கலை ரயில்வே கட்டுப்பாட்டு அறை தெரிவித்தது.

தடம் புரண்ட இடத்திற்கு பயணிகளை ஏற்றி வர மற்றொரு ரயில் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் நாவலப்பிட்டி ரயில்வேக் கட்டுப்பாட்டு அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.





# 2023 - 2024 பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் ஒன்லைனில் சமர்ப்பிக்கலாம்

2023ஃ2024 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்காக ஒன்லைன் ஊடாக விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இன்று காலை 06 மணி முதல் றறற.ரபஉ.யஉ.டம எனும் இணையத்தளத்திற்குள் பிரவேசித்து, விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியுமென ஆணைக்குழு கூறியுள்ளது.

விண்ணப்பங்களை சமர்ப்பிக்க அடுத்த மாதம் 05 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

# கொச்சிக்கடை புனித அந்தோனியார் வருடாந்தத் திருவிழா ஆரம்பமானது

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தின் 190 ஆவது வருடாந்த திருவிழா நேற்று ஆரம்பமானது.

கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் அன்டன் ரஞ்சித் பிள்ளை நாயகம் ஆண்டகை தலைமையில் நேற்றுக் காலை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

புனித அந்தோனியாரின் திருச்சொரூபப் பவனி கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்திலிருந்து மாலை 5.30க்கு ஆரம்பமானது.

இதனையடுத்து கொழும்பு பேராயர் பேரருட்திரு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் புனித அந்தோனியாரின் திருச்சொரூப ஆசிர்வாதம் நேற்று இரவு இடம்பெற்றது.









# 2,500 ஆசிரியர்கள் நியமனங்கள்; கல்வி அமைச்சர் சுசில் அறிவிப்பு



இலங்கையிலுள்ள தேசிய பாட சாலைகளுக்கு 2,500 புதிய ஆசிரியர் நியமனங்களை ஜுலை 3 ஆம் திகதி வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

மாகாண ஆளுநர்களுடன் இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அதன்படி இரசாயனவியல், பௌதீகவியல், உயிரியல், கணிதம், தொழில்நுட்பம், சர்வதேச மொழிகள் ஆகிய பாடங்களுக்கு 2,000 ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2021 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆங்கில மொழிமூல உயர் டிப்ளோமா பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 500 ஆசிரியர்களை நியமிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## சட்டவிரோதமாக கொண்டுவந்த ஒரு தொகை அரிசி பறிமுதல்

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட 386 லட்சம் ரூபா பெறுமதியான அரிசி கையிருப்பு சுங்கப் பிரிவினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த அரிசி கையிருப்பு தமிழ் நாட்டில் இருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதன்போது 54 ஆயிரம் கிலோ கிராம் அரிசி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோத அரிசி தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என சுங்கப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.





## சீரற்ற காலநிலையால் 100,805 பேர் பாதிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 27 ஆயிரத்து 288 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 805 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி சீரற்ற காலநிலையினால் சபரகமுவ மாகாணமே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

சபரகமுவ மாகாணத்தில் 15 ஆயிரத்து 971 குடும்பங்களைச் சேர்ந்த 60 ஆயிரத்து 680 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## இந்திய அமைச்சர் அமித்ஷாவுடன் செந்தில் தொண்டமான் சந்திப்பு

இந்திய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் பா.ஜ.கவின் தேசியத் தலைவரும், அமைச்சருமான ஜே.பி.நட்டா ஆகியோரை கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான செந்தில் தொண்டமான் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு விஜயவாடாவில் நேற்று இடம்பெற்றுள்ளது.

அண்மையில் நடைபெற்று முடிந்த இந்திய மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்றமைக்கு செந்தில் தொண்டமான் இதன்போது வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

இலங்கைக்கு இந்திய அரசாங்கம் தொடர்ந்து வழங்கிவரும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்த அவர், இலங்கைக்கு விஜயம் செய்யுமாறும் அழைப்பு விடுத்தார்.

பொருளாதார அபிவிருத்தி தொடர்பான இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது, இலங்கையில் பெருந்தோட்ட சமூகத்தின் 200 ஆவது ஆண்டு நினைவு முத்திரையையும் செந்தில் தொண்டமானால் அவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

